ஸ்ரீ திரிலோகநாயகி அம்பாள்

சமேத

ஸ்ரீ தியாகராசக் கடவுள்

# பதிகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No
23 JAN 1929
MADRAS
470



சிராவயல்.

Q25:417
N29
18006

உ

சிவமயம்.

சிறுவயல் நகரின்கண்

திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ திரிலோகநாயகி அம்பாள் சமேத

# ஸ்ரீ தியாகராசக் கடவுள்

# பதிகம்.

26884
894.811
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
23 JAN 1929
MADRAS

இஃது

ஷை யூர்

ஸ்ரீமான் க. மு. நா. மெய்யுப்ப செட்டியார் அவர்கள்

விரும்பிய வண்ணம்

யாழ்ப்பாணம் சைவப்பிரசாரகர்

த. குமாரசாமிப்பிள்ளை அவர்களால்

இயற்றப் பெற்றது.

உ

சிவமயம்.

யாழ்ப்பாணம்
சைவசித்தாந்த சமாஜத்தின் காரியதரிசியும்
இந்துக்கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதராயிருந்து
இளைப்பாறியிருப்பவரும் ஆகிய
ஸ்ரீமான்
ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளை அவர்கள் பாடிய

# சாற்றுக்கவிகள்.

செந்தமிழ்ப் பாண்டி நாட்டிற்சிவன்றிருப்பதிக ளான
வந்தமிழால வாயே யாப்பனூர் பாங்குன் றண்ணல்
வந்தவேடகத்தினேடு வான்கொடுங் குன்றம்வானோர்
புந்திசெய் திருப்புத்தூரும்புனவாயில் புகலுங்கோயில் (1)

திருமகள் கொழுநன்கண்ட திருவிரா மேச்சரஞ்சீர்
தருதிரு வாடானையே தனித்திருக்கானப் பேரும்
பொருவில்பூவணமும் போற்றுஞ் சுழியலும் புணரியுண்ட
குருமுனிக் கருள்குற்றாலங் கோதினெல்வேலி யாமே (2)

பதிகங்கள் பாடப்பெற்ற பதினான்குபதிக டம்முள்
அதிகமாந் தனிப்பேருற்றவான்றிருப் புத்தூர்ப் பாங்கு
நதிமதியணிந்த நாதனகர்சிறுவயலினுப்பண்
நிதிபதிவணிகர்கண்டநிகேதன நிகரின்றுமால் (3)

இத்திரு நகரிதன்கணிலங்கிடுஞ் சிவாலயத்தை
மெய்த்திருவதிகமீட்டு மெய்யப்பச்செட்டியென்னு
மத்தன வணிகன்றானே யாகமவிதிவழாது
பத்தியிற்கண்டுபூசைபரிவினிற் பண்டு செய்தான் (4)

செப்பரிய சிறுவயலிற்றிரிலோகநாயகிசேர் தியாகராசன்
ஒப்பரியபுகழதனைப் பதிகமதாயோதியருள் செய்கவென்று

மெய்ப்பரிவினெடுவணிகன் மெய்யப்பனெனும்வள்ளல்விரும்பி [வேண்ட
வப்பரிவினரன்புகழை யழகுபெறவணிந்துரைத்தான்யாவ னென்னின் (5)

செங் கனகமேருவரைச்சிகர மூன்றிற்
றென் கயிலை யானதிரிகோணக்குன்றும்
வங்கமலிகடற் கேதீச்சரமும் வள்ளி
மணவாளன்மகிழ்கதிரைமலையும் மேலாஞ்
சங்கரன்றான் விரும்பி யுறைதெய்வத்தானந்
தழைத்திலகு மீழமதன்றிலகமான
பங்கமில் யாழ்ப் பாணமெனும் பட்டினத்தின்
பல்வளஞ்சேர் கொக்குவில்வாழ் பதியாக்கொண்டோன் (6)

செந்தமிழினிலக்கியமுமிலக்கணமுந் தேர்ந்த பின்னர்ச்
சென்றுசெழுஞ்சோணாட்டிற் சிறந்ததான
வந்தமிலாவாவடுதண்டுறையின் மேய
வாதீனத்தமர்ந்துகலை யனைத்துமாய்ந்து
சந்தமலி தமிழ்மறையைத் தகைசான்மன்றல்
சம்பந்தன்றிரு நல்லூர் மணத்திலோதி
வந்தமுறைவழுவாது பண்ணோடன்பான்
வருங்கிடைகள் யாவருக்கும் வழங்குமேலோன் (7)

தன்னிகரில்லாதசிவன் மேவுந்தெய்வத்
தலங்கடமிற்சென்றுவிழாத்தரிசித் தேத்தி
மன்னியவத்தமிழ்மறையை மாபிற்பாடி
மாதேவனுற்சவத்தை மகிழச்செய்வோன்
இன்னிசையிற் பாவினங்களியற்றுஞ் சீரான்
இயலிசை நாடகமுணர்ந்த விசைவலாளன்
கன்னனறுஞ் சாறனைய கவித்தீந்தேனைக்
கற்றவர்களிதயத்துங் கனிவார்ப் போன் (8)

சைவமெனும் பயிர்தழைக்கச் சாதுசங்கச்
சன்மார்க்கநெறிபிறழாத்தன்மையோடும்
எவ்வமிலாப் பிரசங்கமழையையென்று
மியைந்த பல பதிகளினுமினிதுபெய்து

நைவளநேர்பாடல் பல நயந்து பாடி
நாடெங்கு மான் புகழை நாட்டுஞ்சீலன்
கைவருகற் பகமனைய கலைகள் காட்டுங்
கவினுடையோன் சீருடையோன் கவிஞரேறே (9)
மற்றிவன்றன்மஞ்சவனப்பதியின் மேவு
மயிலூர்தி தனதருளான்மல்லன்ஞாலங்
கற்ற பயன் கவின்கொள்ளக் கழகமொன்று
கண்டனன்றன் பதிமருங்குக் கருணைவள்ளல்
பெற்ற பிதாத்தம்பையபுலவன் செய்த
பெருந்தவத்தினுதித்துவளர் புலவர்சிங்கம்
குற்றமில்சீர்ச்சான்றோனுங் குமாரசாமி
குருவருளாற் பதிகமிது கூறினனே (10)

மெய்கண்டதேவன்றிருவடி வாழ்க.

உ

சிவமயம்.

# சிறுவயல் நகரின்கண்
# திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும்
# ஸ்ரீ திரிலோக நாயகி அம்பாள் சமேத
# ஸ்ரீ தியாகராசக் கடவுள்

# பதிகம்.

## காப்பு

சீரார் சிறுவயல்வாழ் செம்பொற் றியாகேசர்
வாரார் முலையுமையாள் வண்பதிகம்—நேராகும்
செந்தமிழும் தந்தருளும் சிந்துரமா தந்திமுகன்
கந்தவிணைப் பாதமலர் காப்பு.

## நடராசர் துதி.

அஞ்சலெனுங் கரதலமு மம்புலிவாழ் செஞ்சடையும்
பஞ்சகிருத் தியநடமும் பண்புநிறை சிறுவயல்வாழ்
தஞ்சமெனுஞ் சிவகாமித் தாய்தலைவ னடராசன்
கஞ்சமலர்ச் சேவடிகள் கைதொழுது துதிசெய்வாம்.

## தெக்ஷிணா மூர்த்தி துதி.

நன்னயச் சிறுவய னகரிற் கோயிலின்
முன்னமெய்த் தவர்க்கறம் மொழிந்த மோனமாஞ்
சின்மய முத்திரைத் திருக்கைக் கோலமார்
தென்முகக் குருபதஞ் சிரசிற் சூட்டுவாம்.

## சித்திவிநாயகர் துதி.

நித்தியப் பொருளாய்வேத நிதியதாய்ப் பிரணவத்தின்
சத்திய ஞானனந்தத் தனியுரு வடிவாய் நாளும்
புத்தியும் வாழ்வு நல்கும் புண்ணியச் சிறுவயல்வாழ்
சித்தியைங் கரனார்பாதஞ் சென்னியிற் சூட்டிவாழ்வாம்.

## சுப்பிரமணியர் துதி.

புள்ளிபொற் கலாபமஞ்ஞைப் புயமிசை யுலவும்வேலோன்
கொள்ளுமெய்த் தியாகர் கோயிற் குளிர்சிறுவய லின்வாழும்
வள்ளி தெய்வானை பாகம் மருவிய குமரன் பாதம்
தெள்ளிதிற் சிந்தைசெய்து சிரசிலுஞ் சூட்டிவாழ்வாம்.

## திருமகள் துதி.

சங்குகரத் துளமாயன் றழைதுளபத் திருமார்பும்
செங்கமலத் திருமலருந் திளைப்பவளர் திருமகளாம்
எங்களனை திருக்கோல மிலங்குசிறு வயற்கோயிற்
றுங்கமுடன் கண்டுபதந் தொழுதுநிதி வளம்பெறுவாம்.

## வயிரவமூர்த்தி துதி.

அயன்முத லமாருக் கருள்பு ரிந்திடும்
கயவுரிக் கவசமெய் கவினச் சாத்திடும்
நயமிகு சிறுவய னகரிற் கோயில்வாழ்
வயிரவக் கடவுளை வணங்கி வாழ்த்துவாம்.

## நவக்கிரக துதி.

தனதனற் றேருழன்மேவு தலம்பொலி சிறுவயல் சேர்
தினவரி திங்கள்செவ்வாய் திகழ்புதன் வியாழன் வெள்ளி
சனியவ னிராகுகேது தகுநவக் கிரகந்தம்மை
மனமுற வணங்கிப்போற்றி வாழ்த்திவல் வினைகடீர்ப்பாம்.

## நால்வர் துதி.

ஏர்மேவு சிறுவயலி னிதமாருந் திருக்கோயில்
சேர்ஞானச் சிவக்கன்று திருஞான சம்பந்தர்
சீர்வார வாகீசர் திருநம்பி மாணிக்கர்
பார்வாழ வருநால்வர் பாதமலர் தலைக்கொள்வாம்.

## திருநந்தி தேவர் துதி.

செந்திருமருவு மேன்மைச் சிறுவய னகரின்மேவும்
சுந்தரத் தியாகராசன் துதிபெறு கோயில்வாயில்
வந்தனைபுரியும் யார்க்கும் வரங்கொடுத் தருளிவாழும்
நந்தியெம் பெருமான் பாதநாடொறும் வணங்கி வாழ்வாம்.

### சண்டேசுரர் துதி.

வண்டாரு மலர்சாத்தி மணலிலிங்க மான்பாலைக்
கொண்டாட்டச் சிவன்பதவி கொடுத்தருளுங் கோலமுடன்
கண்டாருந் துதிசெய்யுங் கவின்சிறு வயற்கோயிற்
சண்டேச னார்தமது சரணமலர் தலைக்கொள்வாம்.

### முத்துக்கறுப்ப விநாயகர் துதி.

மெத்த வளங்கள் விளங்கு சிறுவயற்
சித்தித் திருக்குளத் தின்குட பாலுறை
முத்துக் கறுப்ப விநாயக முன்னவன்
பத்திக் குகந்த பதங்கள் துதிப்பாம்.

### மடத்து வேலாயுதக் கடவுள் துதி.

அன்னமென் னடைபயி லழகு வாய்ந்துள
கன்னிய ராடவர் கலந்து வாழ்வளம்
மன்னிய சிறுவயன் மடத்தின் மேவிய
வன்னவேற் கடவுளை வணங்கிப் போற்றுவாம்.

### ஆதிரமிளகி ஐயனார் துதி.

ஓருருவாய நின்மல சிவனு மூலகருள் விண்டு மோகினியும்
சேருறவரு செண்டாயுதமூர்த்தி திசையெலா மிசைபுகழ்வீரன்
சீருறு வளங்கள் பலமிகமலிந்த சிறுவயனகர் புரந்தருளும்
ஆருறு மன்பினுதிர மிளகியையனு ரடிமலர் பணிவாம்.

### முனிக்கறுப்பண்ணசாமி துதி.

வாருறுமென் முலைமடவார் மைந்தர்தின மகிழ்ந்தாடும்
நீருமிகும் நிதியமிகும் நெல்வயலின் விளைவுமிகும்
பாருமிகும் சிறுவயலிற் பரிபாலித் தருளினெனு
சாருமுனிக் கறுப்பண்ண சாமியினைப் பணிகுவாம்.

### பயன்.

அரிபோதன் போற்றிசெயு மண்ணறியா கேசன்
திரிலோக நாயகியாந் தேவி—பிரியமுடன்
செந்தமிழின் வண்பதிகஞ் சிந்தைமகிழ்ந் தேற்றெனக்கு
வந்தருளு வார்நல் வளம்.

---

18067
சென்னை-600 002

உ
சிவமயம்.

# பதிகம்.

உருவளரு மதிகங்கை கொன்றைகூ விளைபவள
வொளிசடை யணிந்த வடிவம்
உயிர்கள்பல வண்டங்க ளெங்குநிறை சோதியா
யுற்றிலகு மருவ வடிவம்
அருவுருவ வடிவமிம் மூன்றுநின தெனவேத
வாகம முணர்த்து முறையே
ஆன்மதத் துவவித்தி யாதத்வ சிவதத்வ
மானவிம் மூன்று மொன்றாய்
மருவுபெரு நாதவிந் தின்கூட்ட மாஞ்சிவ
மகாலிங்க வடிவு கொண்டு
வந்துபணி யன்பர்வினை நீக்கியவர் வேண்டிய
வரங்கொடுத் தருளி மேவுந்
திருமருவு வளநிறை சிறுவயற் பதிவளர்
திருக்கோயின் மேவி வாழும்
திரிலோக நாயகி சௌந்தரீ சமேதனே
தியாக ராசக் கடவுளே (1)

சகத்துட னகத்துறை குகப்பா னளித்த மெய்த்
தூயவுப தேச மொழியும்
சுத்தமெய்ஞ் ஞானவடி வத்தநின் குருமொழியும்
சுகிர்தமாய்ப் பெற்ற ஞானி
மகத்துவ மிகுத்துள வகத்திய முனிப்பிரான்
மனத்திடை கதித்த வன்பால்
வளமான பூஜைசெய மகிழ்வாக வேற்றருள்
மகாலிங்க வடிவ முதலே
இகத்தொடு பரத்தினி லினைத்தவை கொடுத்தருளி
யெள்ளினிறை யெண்ணெய் போல
வெங்கெங்கு நிறைகின்ற சச்சிதானந்தனே
யேழையே னுய்ய வருள்வாய்

செகத்தினர் மதித்திடு வனப்புள சிறுவயற்
சினகரம் மேவி வாழும்
திரிலோக நாயகி சௌந்தரி சமேதனே
தியாக ராசக் கடவுளே (2)

இன்பான குமானுறை குன்றையம் பதிநகா
மீசான திசை கம்பனூர்
ஏற்றினன் கோயில்தே னுச்சியம் மன்கோயில்
எழிலான தென்றி சையிலே
கொன்பாவு தளிதிருப்பு த்தூர் குடக்கிலே
குளிர்வாயு திசை வைரவன்
கோயிலும் வடதிசைக் கற்பக விநாயகர்
கோயிலும் சூழ நடுவே
பொன்பாவு மாகத மகாலிங்க வடிவினொடு
பொலிதரும் புனித வடியேன்
புண்ணயதா நின்கமல விணையடிக ணம்பினேன்
போற்றினேன் கருணை தருவாய்
தென்பாண்டி நாட்டுள சிறுவயற் பதியுறை
திருத்தளியின் மேவி வாழும்
திரிலோக நாயகி சௌந்தரி சமேதனே
தியாக ராசக் கடவுளே (3)

நம்பன் திருச்சடை வனத்துறை நதிக்கரையி
னளிர்மதிப் பிள்ளை யுலவ
நாதனுங் கணபதி துதிக்கை பிடித்தந்த
நாளினி லொடித்து வைத்த
கொம்பென்ன வைத்தழகு நோக்கிடக் கண்டுவேற்
குமானுந் தாயின் முன்போய்க்
குழவியான் விளையாடு மதிபிடித்தனனென்று
குறைகழல் பணிந்து வேண்டத்
தம்பின் வருந்தம்பி மகிழ்தரச் செய்திடுதல்
தமையனுக் கழகி தென்னத்
தாய்சொன்ன படிசெய்த தனையற்கு மகிழ்கின்ற*
சங்கரா நன்மை யருள்வாய்

செம்பொன் மணிக்குவை நிறைந்தமா ளிகைபொலி
சிறுவயற் பதியின் வாழும்
திரிலோக நாயகி சௌந்தரி சமேதனே
தியாக ராசக் கடவுளே (4)

சந்திரன் வந்தடி பணிந்திட வவன்கலை
தழைத்திடச் சடையில் வைத்தாய்
சலதிவரு நஞ்சமுண் டபணுதி புலவோர்கள்
தங்களுயிர் காத்து வைத்தாய்
தந்தையின் காறடியு மைந்தனையு நின்றனது
சண்டேச பதவி வைத்தாய்
சார்வுறும் பழிநீக்கி யிந்திரன் பொன்னுலகு
தன்னிடம் வாழ வைத்தாய்
வந்தெதிரு மறலியுயிர் பொன்றிட வுதைத்தந்த
மார்க்கண்ட னுயிரை வைத்தாய்
வள்ளலே நினதுபுகழ் பாடுமடி யேனுய்யு
மார்க்கமருள் செய்த லரிதோ
சிந்தனை மகிழ்ந்தெவரும் வந்துதுதி செய்திடு
சிறுவயற் பதியில் வாழும்
திரிலோக நாயகி சௌந்தரி சமேதனே
தியாக ராசக் கடவுளே (5)

எண்ணரிய வுயிர்கள்பல வண்டங்கள் யாவினையு
மீன்றருளு மன்னை யிடமே
யிருநாழி நெற்கொடுத் தெண்ணான்கு தருமமு
மிலங்கிட வளர்த்தருளினாய்
பண்ணினிய பாணபத் திரனடிமை யானென்று
பண்டிந் தனம் பகர்ந்து
பாதங்கள் புவிதோயக் கீதங்கள் சாதாரி
பாடிவிளை யாடல் செய்தாய்
மண்ணரிய முடிசுமந் தருளினாய் வணிகனாய்
மாணிக்கம் வளையல் விற்றாய்
மாமனாய் மன்றினில் வழக்குரைத் தருளினாய்
வாணிச்சி பிட்டை யுண்டாய்

திண்ணநின் பாலனுக் கருள்செய்த லரியதோ
சிறுவயற் பதியில் வாழும்
திரிலோக நாயகி சௌந்தரி சமேதனே
தியாக ராசக் கடவுளே (6)

பந்தமகல் பால்ஞான வமுதுசம் பந்தனின்
பவளவா யூட்ட விலையோ
பாட்டினைக் கேட்டவன் வேட்டபொன் னாயிரம்
படிமீது வைக்க விலையோ
சுந்தரன் மையன்மா னிடனாய் மயங்கநீ
தொண்டாண்டு கொள்ள விலையோ
தூயவா கீசரைக் கன்மிதப் பச்செய்து
சூலைநோய் தீர்க்க விலையோ
கொந்தலர் குருந்தடியில் வாதவூ ரற்குநீ
குருமொழி புகட்ட விலையோ
கோவைதிரு வாசகமு மெழுதிமுறை யம்பலக்
கோயிலிடம் வைக்க விலையோ
சிந்தைவைத் தென்றனக் கருள்செய்த லரியதோ
சிறுவயற் பதியில் வாழும்
திரிலோக நாயகி சௌந்தரி சமேதனே
தியாக ராசக் கடவுளே (7)

நித்திய பராபர நிராமய நிரஞ்சன
நிருத்தமெ யகண்ட போதா
நிருமல புராதன திகம்பர சுகானந்த
நிர்க்குணா பூத நாதா
மத்தது கடைந்திடுந் தயிர்போல வோயாமன்
மனமது சுழன்றி டாநல்
வழிகாட்டி மங்கையர்கள் விழியூட்டு மயல்வீட்டி
வான்கருணை யமுது பொழியும்
தத்துவ தயாபர பரஞ்சோதி தாணுநின்
சரணமே யரண மையா
சன்மார்க்க ரல்லாத மூடர்பகை பிணிவறுமை
சஞ்சலந் தீர்த்தரு ளுவாய்

சித்திதரு மமுததீர்த் தக்குளமு முன்பொலி
சிறுவயற் பதியில் வாழும்
திரிலோக நாயகி சௌந்தரி சமேதனே
தியாக ராசக் கடவுளே (8)

பாராகி நீராகி வன்னியாய் வளியுமாய்ப்
பரமவா காச மாகிப்
பகலாகி நிலவாகி யுயிராய் நிறைந்துதிகழ்
பண்பினெண் வடிவ மாகி
நேராகி முன்னதாய் நடுவுமாய்ப் பின்னுமாய்
நிலைபெற்ற மூல முதலாய்
நினைவிலுங் கனவிலுந் தொண்டருள் ளத்திலே
நிகழுமா னந்த மாகிப்
பேராகி யூராகி யுருவமாய் நிற்குநின்
பெருமையென் சொல்லுவேன் யான்
பிறர்பகைமை பிணிவறுமை யணுகாவரந்தந்து
பெருவாழ்வு கருணை புரிவாய்
சீராகி மழைபெய்து விளைகழனி மலிதரு
சிறுவயற் பதியில் வாழும்
திரிலோக நாயகி சௌந்தரி சமேதனே
தியாக ராசக் கடவுளே (9)

சங்கரநி னடிபரவு சன்மார்க்க ருறவினைச்
சார்ந்து நான்வாழ வேண்டும்
சத்தியந் தருமநெறி நில்லார்களுறவினைச்
சாராது வாழ வேண்டும்
பொங்கர வணிந்தநின் புண்ணியப் புகழ்தினம்
போற்றிநான் வாழ வேண்டும்
போலியாய் நடமாடு கன்மன வுலோபரைப்
போற்றாது வாழ வேண்டும்
புங்கவநி னருள்வேண்டு மங்கநோயற்ற
புனிதமாம் வாழ்வு வேண்டும்
பொருள்வேண்டு மிகுகல்வி தெருள்வேண்டுமப்பனே
பூதல மதிக்க வருள்வாய்

திங்களெனு முகமங்கை பங்கனே வளமிகு
சிறுவயற் பதியில் வாழும்
திரிலோக நாயகி சௌந்தரி சமேதனே
தியாக ராசக் கடவுளே (10)

முக்கனி பிழிந்தமுது கற்கண்டு தேன்பாலில்
முழுவதும் பாகு கூட்டி
மும்முறை வடித்துத் தெளித்தெடுத்தாலொத்த
முதிர்சுவைப் பாடல் கேட்டாய்
தக்கமது ராபுரிச் சங்கத்திருந்து முன்
தண்டமிழி னருமை தேர்ந்தாய்
தமியனேன் புன்மொழியை யேற்றருள்வை யென்னிலோ
தந்தைநீ யாத லாலே
பக்குவமி லாக்குழவி மழலைமொழி பிழையெனப்
பார்த்திடாய் மகிழ்வை யென்னும்
பான்மையாற் பதிகமும் பாடினேன் நீயெனைப்
பாதுகாத் தருள்க வள்ளால்
திக்குக ணிறைந்திசை திகழ்ந்திடு வளஞ்செறி
சிறுவயற் பதியில் வாழும்
திரிலோக நாயகி சௌந்தரி சமேதனே
தியாக ராசக் கடவுளே (11)

பதிகம் முற்றுப் பெற்றது.

---

## வாழ்த்து

திலகமெனுஞ் சிறுவயல்வாழ் தியாகேசர் பதம்வாழி
நலமிகுந்த திரிலோக நாயகியின் பதம்வாழி
தலமியற்றுந் தருமமிகுந் தனவணிகர் தினம்வாழி
உலகுமழை பசுபதிகம் உயர்பூதி முறைவாழி

உலகெலாம் வாழ்க.

சென்னை-600 008.
180067

ஊழியன் அச்சுக்கூடம், காரைக்குடி, சுருக-உ௦௦-அ.

ஊழியன்
அச்சுக்கூடம்,
காரைக்குடி.